# கூடுதல் மாவட்ட நீதிமன்றம், திண்டுக்கல்

## அமர்வு வழக்கு எண்.132/2025

## அ.சா. 3 (LW 3 )

| | | | |
|---|---|---|---|
| **பெயர்** | **திரு.பழனிவேல் முருகன்** | **தொழில்** | |
| **த/க பெயர்** | வேலுச்சாமி | **மதம்** | |
| **கிராமம்** | | **வயது** | |
| **தாலூகா** | | **தேதி** | **03.03.2026** |

1873ம் வருடத்திய சட்டம் பிரிவு 10ன்படி பிரமாணத்தின் பேரில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

1,2,3,5 எதிரிகள் ஆஜர். 4ம் எதிரி இறப்பு

**<u>முதல் விசாரணை</u>**

நான் தற்போது சங்கல்பட்டியில் குடியிருந்து வருகிறேன். விவசாயம் செய்து வருகிறேன். சுமார்15 ஆண்டுகள் முன்பு நான் பெப்சி நிறுவனத்தில் சேல்ஸ்மேனாக வேலை செய்து வந்தேன். அ.சா.2 நான் வேலை செய்த நிறுவனத்தின் உரிமையாளர்ஆவார். அ.சா.1. ராமகிருஷ்ணன் என் நிறுவனத்தில் பணி செய்து வந்தார். சுமார் 12 ஆண்டுகளுக்கு முன்பு நான் வேலை செய்த நிறுவனத்தின் தினசரி வசூல் செய்யும் தொகையை ராமகிருஷ்ணனிடம் கொடுப்பது வழக்கம். அவ்வாறு வசூல் தொகையை பெற்றுக் கொள்ளும் ராமகிருஷ்ணன் அவரது வீடான சின்னாளபட்டி கொண்டு செல்லும் போது பஞ்சம்பட்டி பிரிவு அருகே ராமகிருஷ்ணன் கொண்டு சென்ற பணத்தை 4 நபர்கள் பிடுங்கி கொண்டதாக எனது முதலாளியான அ.சா.2 கதிர்வேலுக்கு அ.சா.1 தகவல் சொல்லி நாங்களும் சம்பவ இடத்திற்கு சுமார் 4,5 நபர்கள் சம்பவ இடத்திற்கு சென்று பார்வையிட்டு அன்று சில இடங்களையும், பணத்தை பறித்துக் கொண்டவர்களையும் தேடினோம். அங்கு யாரும் இல்லாத காரணத்தால் அ.சா.2. அ.சா.1. ராமகிருஷ்ணன் உடன் சென்று அம்பாத்துறை காவல்நிலையம் சென்று அ.சா.1 புகார் கொடுக்க நாங்கள் உதவியாக இருந்தோம். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>2,3 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

வழக்கமாக தினசரி வேலை முடிந்தபிறகு நான் மற்றும் மேலாளர் வீட்டிற்கு சென்று விடுவோம் என்றால் சரிதான். சம்பவம் நடந்ததை கேள்விப்படும் போது நான் வீட்டிற்கு போய் விட்டேனா என்றால் போய்விட்டேன். அதன்பின்பு என் முதலாளி போனில் அழைத்ததால் வந்தேன். போலிசார் விசாரணையில் எனக்கு எந்த வகையில் தகவல் கிடைக்கப்பெற்றது, தகவல் கிடைக்கப்பெற்ற போது நான் எங்கு இருந்தேன், நான் தகவல் கிடைக்கப் பெற்ற பின்பு எந்த வகையில் சம்பவ இடம்

வந்தேன் போன்ற விவரங்களை போலிசார் விசாரணையில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். எதிரிகள் பிடுங்கி சென்றதாக தொகை எவ்வளவு என்று எனக்கு தெரியாது. நான் முதல்விசாரணையில் சொன்னது போல் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றாலும் வழக்கின் புகார்தாரர் என் மேல்அதிகாரி என்பதால் அவருக்கு சாதகமாக போலிசார் கேட்டுக் கொண்டதன் பேரில் தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**1 மற்றும் 5 வது எதிரி தரப்பில் மேற்படி குறுக்கு விசாரணையை ஏற்றுக் கொள்வதாக தெரிவிக்கப்பட்டது. பின்வருமாறு குறுக்கு விசாரணை**

நான் முதல் விசாரணையில் சொன்னது போல் அ.சா.1 ராமகிருஷ்ணன் சொல்லிதான் அ.சா2.கதிர்வேலுக்கு சம்பவம் பற்றி தெரியவந்து அதன் பின்னிட்டுதான் எனக்கு சம்பவம் தெரிய வந்தது என்று போலிசார் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான்.

**மறு விசாரணை – இல்லை.**

/ஒப்பம்/

XXXXXXX

Taken down by me in open court read over to the witness, admitted by him to be correct this contains a full and true account of the statement Made by the witness.

SWARNAM J RAJAGOPALAN

Digitally signed by SWARNAM J RAJAGOPALAN
Date: 2026.03.03 20:23:40 +0530

Additional District and Sessions Judge,

Dindigul.